# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 344/மா/2025**

**நாள்: 07.05.2026**

C. ஹரிபாபு
ஆவடி, சென்னை–55 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவரின் 21.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.08.2025 அன்று பெறப்பட்டு 344/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவர் தனது 21.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வார்டுகளில் சட்டத்திற்கு விரோதமாக பல விதிமுறைகள் மீறி கட்டிடங்கள் வணிக வளாகங்கள் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு விரோதமாக கட்டப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்டவை வரிசையாக அனுமதியற்ற கட்டிடங்கள் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது.

1) ஆவடி மாநகராட்சி அருகே உள்ள நேரு பஜார் A.M. கலெக்ஷன் ஜமால் கட்பீஸ் ரெடிமேட்ஸ் முகவரி எண் 43 நேரு பஜார் ஆவடி மார்க்கெட் பகுதியில் வணிக வளாகம் கட்டிடம் சுமார் 18 அனுமதி இல்லாமல் வணிக வளாகம் கட்டப்பட்டு வருகின்றன.

2) DECATHLON PERFLY 24 மணி நேரம் இயங்கக்கூடிய வியாபார வணிக விளையாட்டு மையம் கட்டிடம் தர்மராஜா கோயில் தெரு பருத்திப்பட்டு இடத்தில் அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

3) ஆவடி C.T.H. மெயின் ரோடு பகுதியில் சட்டத்திற்கு விரோதமாக வணிக வளாகம் அனுமதியற்ற கட்டிடம் 1. கல்யாண் ஜுவல்லரி கடை, 2. தனிஷ்க் வணிக வளாகம் கடை, 3. ப்ளுஸ்டோன் வணிக வளாகம் நகைக்கடை அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பலமுறை நகரமைப்பு பிரிவு அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தும் எந்தவிதமான நோட்டீஸ் வழங்கப்படவில்லை.

4) G.R.T. ஜுவெல்லர்ஸ் நகைக்கடை வணிக வளாகம் கட்டிடம் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது. C.T.H. சாலை மெயின் ரோடு ஆவடி.

5) திருமுல்லைவாயில் பகுதி சரஸ்வதி நகர் diamond திருமண மண்டபம் சட்டத்திற்கு புறம்பாக விதிமுறைகள் மீறி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் பல முறை அனுமதியற்ற கட்டிடம் நோட்டீஸ் வழங்கப்பட்டு இன்று வரை அந்த கட்டிடத்திற்கு சீல் வைக்காமல் அதிகாரிகள் இருந்து வருகிறார்கள்.

6) திருமுல்லைவாயில் முருகப்பா பாலிடெக்னிக் எதிரில் வணிக வளாகம் கடை உரிமையாளர் பெயர் லோகநாதன் சுமதி door number 30 Ravindhran nagar மூன்று மாடி வணிக வளாகம் கட்டிடம் மீது விதிமுறைகள் அறிவிப்பு நோட்டீஸ் நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் locking and ceiling நோட்டீஸ் வழங்கப்பட்டு வணிக வளாகம் கட்டிடம் மீது இன்று வரை வணிக வளாக கட்டிடத்திற்கு சீல் வைக்காமல் சட்டத்தை காற்றில் பறக்க விட்டு வருகிறார்கள்.

வரிசை எண் 1 முதல் 6 வரை உள்ள புகாரில் கூறப்பட்டுள்ள வணிக வளாகம் கட்டிடம் முழுக்க முழுக்க விதிமீறல்கள் கட்டிடங்கள் அனுமதி அற்ற கட்டிடங்கள் மீது ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்கள் locking and ceiling நோட்டீஸ் வழங்கி சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சீல் வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த எட்டு மாதங்களாக நகரமைப்பு பிரிவில் அதிகாரிகள் அனுமதியற்ற கட்டிடங்கள் மற்றும் விதிமீறல்கள் கட்டிடங்கள் மீது எவ்வித நோட்டீஸ் வழங்காமல் 200 மேற்பட்ட கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் நோட்டீஸ் வழங்காமல் லைசன்ஸ் சர்வேயர் மற்றும் புரோக்கர்கள் மூலம் மறைமுகமாக லஞ்சம் கோடி கணக்கில் நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் வாங்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீது துறைரீதியாக விசாரணை மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

CMDA அதிகாரிகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை மற்றும் அரசாணைபடி சட்டத்திற்கு விரோதமான விதிமீறல்கள் உள்ள வணிக வளாகம் கட்டிடங்கள் மீது locking and ceiling நோட்டீஸ் வழங்கி வணிக வளாகம் கட்டிடம் மீது சீல் வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி முறைமன்றம் நடவடிக்கை எடுக்குமாறு மனு: கட்டிடங்கள் விதிமீறல்கள் உள்ள கட்டிடங்களை நகரமைப்பு அதிகாரிகள் அளவீடு செய்து உள்ளாட்சி முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் . ”

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர், எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தனது 24.03.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 7622/2025/எப்2–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வணிக வளாகங்கள் மற்றும் கட்டிடங்கள் அனுமதியின்றி சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ளதாக 20.08.2025 நாளிட்ட திரு. C. ஹரிபாபு என்பவரால் புகார் வரப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து அக்கட்டிடங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 & 57–ன் கீழ் படிவம்–1 இம்மாநகராட்சியிலிருந்து நாள் 03.10.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது. படிவம்–1 இன்படி ஆவணங்கள் சரிபார்ப்பு நடைபெற்ற பிறகு மேல் நடவடிக்கை தொடரப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது."

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வார்டுகளில் சட்டத்திற்கு புறம்பாக பல விதிமுறைகள் மீறி கீழ்க்கண்ட கட்டிடங்கள்/வணிக வளாகங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

(1) ஆவடி மாநகராட்சி, நேரு பஜார், கதவு எண் 43–ல் அனுமதியில்லாமல் வணிக வளாகம் கட்டப்பட்டு அங்கு, A.M ஜமால் கட்பீஸ் ரெடிமேட்ஸ் நிறுவனம் இயங்கி வருகிறது.

(2) ஆவடி மாநகராட்சி தர்மராஜாகோவில் தெரு பருத்திப்பட்டு என்ற இடத்தில் DECATHLON PERFLY என்ற விளையாட்டு மையம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

(3) ஆவடி C T H மெயின்ரோடு பகுதியில் சட்டவிரோமாக அனுமதியின்றி வணிக வளாகம் கட்டப்பட்டு, 1. கல்யாண் ஜுவல்லரி கடை, 2 தனிஷ்க் வணிக வளாகம் கடை, 3. ப்ளுஸ்டோன் வணிக வளாகம் நகைக்கடை ஆகியவை இயங்கி வருகிறது.

(4) ஆவடி மாநகராட்சி CTH மெயின்ரோட்டில் G.R.T. ஜுவல்லர்ஸ் நகைக்கடை அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(5) திருமுல்லைவாயில் பகுதியில் சரஸ்வதி நகர் டைமண்ட் திருமண மண்டப கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடங்களின் மீது அமலாக்க நடவடிக்கை உட்பட உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.''.

6. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவடி மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 27.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''<u>மனுதாரர் தெரிவித்துள்ள:–</u>

(1) ஆவடி மாநகராட்சி, நேரு பஜார், கதவு எண் 43–ல் உள்ள வணிக வளாக கட்டிடம்

(2) ஆவடி மாநகராட்சி தர்மராஜாகோவில் தெரு பருத்திப்பட்டு என்ற இடத்தில் DECATHLON PERFLY என்ற விளையாட்டு மையம்

(3) ஆவடி C T H மெயின்ரோடு பகுதியில் சட்டவிரோமாக அனுமதியின்றி வணிக வளாகம் கட்டிடம்

(4) திருமுல்லைவாயில் பகுதியில் சரஸ்வதி நகர் டைமண்ட் திருமண மண்டப கட்டிடம்

மேலே இனம் 1, 2 மற்றும் 4 ஆகிய கட்டிடங்களுக்கு 03.10.2025 நாளிட்ட முதல் தாக்கீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன்படி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடங்களுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலே 3 குறிப்பிட்டுள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் இக்கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதி பெற்றுள்ளார். ஆனால் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், 03.10.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

(5) திருமுல்லைவாயில் முருகப்பா பாலிடெக்னிக் எதிரில் ரவிசந்திரன் நகர் கதவு எண் 30 வணிக வளாகத்தின் உரிமையாளர் சுமதி அவர்கள் விதிகள் மீறி கட்டப்பட்ட கட்டிடத்தை 04.02.2026ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இனம் 5ஐ தவிர, மற்ற கட்டிடங்களுக்கு உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

''ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வார்டுகளில் சட்டத்திற்கு புறம்பாக நேரு பஜார், கதவு எண் 43–ல் A.M ஜமால் கட்பீஸ் ரெடிமேட்ஸ் நிறுவனம், தர்மராஜாகோவில் தெரு பருத்திப்பட்டு என்ற இடத்தில் DECATHLON PERFLY என்ற

விளையாட்டு மையம், ஆவடி C T H மெயின்ரோடு பகுதியில் 1. கல்யாண் ஜுவல்லரி கடை, 2 தனிஷ்க் வணிக வளாகம் கடை, 3. ப்ளூஸ்டோன் வணிக வளாக நகைக்கடை உள்ளடக்கிய வணிக வளாக கட்டிடம் மற்றும் CTH மெயின்ரோட்டில் G.R.T. ஜுவல்லர்ஸ் நகைக்கடை ஆகிய கட்டிடங்கள் மாநகராட்சியிடமிருந்து கட்டிட அனுமதி பெறாமல் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டு உள்ளது என்பதும் மற்றும் திருமுல்லைவாயில் பகுதியில் சரஸ்வதி நகர் டைமண்ட் திருமண மண்டப கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது என்பதும், எனவே மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடங்களின் மீது அமலாக்க நடவடிக்கை உட்பட உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள, ஆவடி மாநகராட்சி, நேரு பஜார், கதவு எண் 43–ல் உள்ள வணிக வளாக கட்டிடம், தர்மராஜாகோவில் தெரு பருத்திப்பட்டு என்ற இடத்தில் DECATHLON PERFLY என்ற விளையாட்டு மையம் மற்றும் திருமுல்லைவாயில் பகுதியில் சரஸ்வதி நகர் டைமண்ட் திருமண மண்டபம் ஆகிய கட்டிடங்களுக்கு 03.10.2025 நாளிட்ட முதல் தாக்கீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன்படி வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஆவடி, C T H மெயின்ரோடு பகுதியில் சட்டவிரோமாக அனுமதியின்றி கட்டப்பட்ட வணிக வளாகம் கட்டிடம் குறித்தான கள ஆய்வில் இக்கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதி பெற்றுள்ளார் என்பதும், ஆனால் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், 03.10.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட அனைத்து கட்டிடங்களுக்கும் உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், திருமுல்லைவாயில் முருகப்பா பாலிடெக்னிக் எதிரில் ரவிசந்திரன் நகர் கதவு எண் 30 வணிக வளாகத்தின் உரிமையாளர் சுமதி அவர்கள் விதிகள் மீறி கட்டப்பட்ட கட்டிடத்தை 04.02.2026ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள கீழ்க்கண்ட புகார்கள்

(1) ஆவடி மாநகராட்சி, நேரு பஜார், கதவு எண் 43–ல் அனுமதியில்லாமல் வணிக வளாகம் கட்டப்பட்டு அங்கு, A.M ஜமால் கட்பீஸ் ரெடிமேட்ஸ் நிறுவனம் இயங்கி வருகிறது.

(2) ஆவடி மாநகராட்சி தர்மராஜாகோவில் தெரு பருத்திப்பட்டு என்ற இடத்தில் DECATHLON PERFLY என்ற விளையாட்டு மையம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

(3) ஆவடி C T H மெயின்ரோடு பகுதியில் சட்டவிரோமாக அனுமதியின்றி வணிக வளாகம் கட்டப்பட்டு, 1. கல்யாண் ஜுவல்லரி கடை, 2 தனிஷ்க் வணிக வளாகம் கடை, 3. ப்ளூஸ்டோன் வணிக வளாகம் நகைக்கடை ஆகியவை இயங்கி வருகிறது.

(4) ஆவடி மாநகராட்சி CTH மெயின்ரோட்டில் G.R.T. ஜுவல்லர்ஸ் நகைக்கடை அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(5) திருமுல்லைவாயில் பகுதியில் சரஸ்வதி நகர் டைமண்ட் திருமண மண்டப கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது.

தொடர்பாக உதவி ஆணையர் நிலையில் உள்ள ஒருவரை நியமித்து மேற்குறிப்பிட்டுள்ள இடங்களை கள ஆய்வு செய்து, அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 07 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. C. ஹரிபாபு,
எண் 21, ஹை ஸ்கூல் தெரு,
மிட்டணமல்லி, ஆவடி, சென்னை–600 055.

(2) ஆணையாளர், ஆவடி மாநகராட்சி, ஆவடி,
சென்னை–600 054.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.